V11His

விருதுநகர் மாவட்டம்

இரண்டாம் இடைப் பருவ பொதுத் தேர்வு - 2023

-----

# வகுப்பு 11

நேரம் : 1.30 மணி | வரலாறு | மதிப்பெண்கள்: 50

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** **10×1=10**

1) ............. பாண்டியர்களின் முதல் தலைநகரமாகும்.

அ) மதுரை ஆ) காயல்பட்டினம் இ) கொற்கை ஈ) புகார்

2) **பொருத்துக:**

i) படைமுகாம் - 1. படைவீடு

ii) புறக்காவல் படைகள் - 2. தண்டநாயகம்

iii) தலைவர் - 3. நிலைப்படை

iv) படைத்தளபதி - 4. படைமுதலி

அ) 1, 3, 4, 2 ஆ) 4, 2, 1, 3 இ) 2, 1, 3, 4 ஈ) 2, 3, 1, 4

3) ஷாநாமாவை எழுதியவர் .............

அ) பிர்தௌசி ஆ) நிக்கோலா டி கோன்டி

இ) இபன் பதூதா ஈ) டோமிஸ்கோ பயஸ்

4) கீழ்க்கண்டவற்றை காலவரிசைப்படுத்துக.

அ) சங்கம வம்சம், ஆரவீடு வம்சம், சாளுவ வம்சம், துளுவ வம்சம்

ஆ) சங்கம வம்சம், சாளுவ வம்சம், துளுவ வம்சம், ஆரவீடு வம்சம்

இ) சாளுவ வம்சம், சங்கம வம்சம், துளுவ வம்சம், ஆரவீடு வம்சம்

ஈ) சங்கம வம்சம், துளுவ வம்சம், சாளுவ வம்சம், ஆரவீடு வம்சம்

5) அத்வைதம் என்னும் தத்துவத்தை இந்து மதத்திற்கு வழங்கியவர்

அ) ஆதிசங்கரர் ஆ) இராமானுஜர் இ) இராமானந்தர் ஈ) சைதன்யர்

6) மராத்திய மன்னர் சிவாஜியின் சமகாலத்தவர் ............. ஆவார்.

அ) இராமானந்தர் ஆ) மீராபாய் இ) சூர்தாஸ் ஈ) துக்காராம்

7) ............. தனது ஆட்சியின் போது ஜிஸியா வரியை மீண்டும் விதித்தார்.

அ) அக்பர் ஆ) ஜஹாங்கீர் இ) ஷாஜகான் ஈ) ஔரங்கசீப்

8) ............. சேர்ந்த தான்சேனை அக்பர் ஆதரித்தார்.

அ) ஆக்ரா ஆ) குவாலியர் இ) தில்லி ஈ) மதுரா

9) புரந்தர் உடன்படிக்கை சிவாஜிக்கும் .............க்கும் இடையே கையெழுத்தானது.

அ) அஃப்சல்கான் ஆ) செயிஷ்டகான் இ) ஜெய்சிங் ஈ) ஔரங்கசீப்

10) ............. கோகினூர் வைரத்தை எடுத்துச் சென்றார்.

அ) அகமது ஷா அப்தலி ஆ) நாதிர்ஷா

இ) ஷீஜா-உத்-தௌலா ஈ) நஜீப்-உத்-தௌலா

**II. குறுகிய விடை தருக: (ஏதேனும் ஐந்து மட்டும்)** **5×2=10**

**(கட்டாய வினா எண் 17)**

11) சோழமண்டலம் மும்முடிச் சோழமண்டலம் என அழைக்கப்பட்டது ஏன்?

12) விஜயநகர அரசு யாரால் ஏற்படுத்தப்பட்டது? எதனால் அப்பெயர் வந்தது?

13) முதலாம் முகமது பற்றி நீங்கள் அறிந்தது என்ன?

14) இராமானந்தரின் போதனைகள் யாவை?

15) பாபர் இந்தியாவின் மீது படையெடுக்கத் தூண்டியது எது?

16) புரந்தர் உடன்படிக்கையின் ஷரத்துக்கள் யாவை?

17) சரஸ்வதி மஹால் நூலகம் பற்றி ஒரு குறிப்பு வரைக.

**III. சுருக்கமான விடை தருக: (ஏதேனும் ஐந்து மட்டும்)** **5×3=15**

**(கட்டாய வினா எண் 24)**

18) இராஜேந்திரசோழன் 'கடாரம் கொண்டான்' என அழைக்கப்படுவது ஏன்?

19) தொடக்க காலப் பாண்டியரால் கட்டப்பட்ட குடைவரைக் கோவில்கள் யாவை?

20) நாயக்க முறை

21) கோல்கொண்டா கோட்டை எங்கே கட்டப்பட்டது? அதன் அமைப்பை விவரி.

22) கபீரின் போதனைகளை விவரி.

23) நவ வித்யா முறையை அறிமுகம் செய்தது ஒரு முக்கிய முன் முயற்சியாகும் - எவ்வாறு?

24) தீன் இலாஹி பற்றி நீவிர் அறிவது யாது?

**IV. விரிவான விடை தருக:** **3×5=15**

25) அ) கோவில் - ஒரு சமூக நிறுவனம் இக்கூற்றை நிறுவுக.

**(அல்லது)**

ஆ) முகமது கவானின் ஆட்சிமுறை மற்றும் ராணுவ நிர்வாகம் பற்றி விவரி.

26) அ) பக்தி இயக்கத்தின் சிறப்பியல்புகளை வரிசைப்படுத்துக.

**(அல்லது)**

ஆ) ''வருவாய் நிர்வாகத்தில் ஷெர்ஷா அக்பரது முன்னோடி'' - விளக்குக.

27) அ) நவீன கல்வி முறைக்கு இரண்டாம் சரபோஜியின் பங்கினை விளக்குக.

**(அல்லது)**

ஆ) முகலாயா கால நிகழ்வுகளில், ஏதேனும் ஐந்தினை காலக்கோட்டில் வரைக.

---------

www.Padasalai.Net